(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 16.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, யூலை 21, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0075 / ' 09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 முதல் 2009 வரையிலான காலப்பகுதினுள் 3% இற்கும் அதிகமான வட்டியில் பெறப்பட்ட சகல கடன்களையும், டொடரில் அல்லது அதற்கு நிகரான பெறுமதியில், வருடாந்த அடிப்படையில் எவ்வளவு என்பதை கடன் வழங்கியவரின் பெயருடன் சேர்த:து அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2006 முதல் 2015 வரையிலான காலப்பகுதியிலான மொத்த பொறுப்பு வட்டி மற்றும் முதல் ஆகியவற்றை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாகக் காட்டியும்,

(ii) 2006 முதல் 2009 வரை ஒவ்வொரு வருடத்திற்குமான அரசாங்கத்தின் வருமானத்தையும்,

(iii) 2010 முதல் 2015 வரையான காலப்பகுதிக்குரிய வருவாய்க்கான அரசாங்கத்தின் எதிர்வுகூறல்களையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0114 / '09

2.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசத்தை கட்டியெழுப்புவதற்கான அமைச்சின் கீழ் பிராந்திய இலக்கம் 02 இன் கீழ் வருகின்ற கொழும்பு, கம்பஹ, களுத்துறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் சமூக நலன்புரி கருத்திட்டங்களின் பொருட்டு 2006, 2007, 2008, மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்காக தனித்தனியாக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி கருத்திட்டத்தின் வேலைகள் முடிவடைந்திருப்பின் வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதி, வேலை முடிவடைந்த திகதி, மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் செலுத்தப்பட்டுள்ள முழுத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் பயன்பெறுனர் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0231 / ' 09

3.

கௌரவ பேமசிறி மானகே,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "வரையறுக்கப்பட்ட இலங்கை சலுசல" நிறுவனத்தின் தற்போதைய தலைவரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்,

(ii) மேற்படி சலுசல நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை, பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தலைவரும் பணிப்பாளர் சபையும் எப்போது நியமிக்கப்பட்டதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0271/ '09

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "வாடகை முச்சக்கரவண்டிச் சேவை" எமது நாட்டின் போக்குவரத்துச் சேவையின் ஒரு பகுதியாகும் என்பதையும்,

(ii) முச்சக்கரவண்டிச் சேவை முறையான கட்டுப்பாட்டுக்கிணங்க பேணிவரப்பட வேண்டிய சேவையாகுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) நகரங்களிலும் வீதிகளிலும் முச்சக்கரவண்டிகள் நிறுத்திவைக்கப்படுதல் சம்பந்தமாகவும் புதிய முச்சக்கர வண்டியொன்று போக்குவரத்துச் சேவையில் இணைந்துகொள்ளல் தொடர்பாகவும் நிலவுகின்ற சட்டம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இச்சேவையை பேணிவருதலுடன் தொடர்புபடுகின்ற பல்வேறு நிறுவனங்களுடனான இடைத்தொடர்பு வேலைத்திட்டமொன்று இருக்கவேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஈ) (i) நாட்டில் வாடகை முச்சக்கர வண்டிகளாக விளங்குகின்ற வாடகை வண்டிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

0357 / '09

5.

கௌரவ (திருமதி) சுஜாதா அழககோன்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1973 ஆம் ஆண்டில் காணிச் சீர்த்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல பிரதேச செயலகப் பிரிவின் பன்சலதென்ன மாஉஸ்ஸாவ காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வேளையில் அதன் உரிமை எவருக்கு இருந்ததென்பதையும்,

(ii) சுவீகரிக்கப்பட்ட அக்காணியின் பரப்பளவு யாதென்பதையும்.

(iii) அத்தருணத்தில் "சட்டபூர்வக் கடப்பாடு" எனும் வகையில் 50 ஏக்கர் காணி அதன் மூல உரிமையாளருக்கு வழங்கப்பட்டதாவென்பதையும்,

(iv) அவ்வாறு வழங்கப்பட்டிருப்பின் அது யாருக்கு என்பதையும்,

(v) வழங்கப்படவில்லையாயின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பன்சலதென்ன / மாஉஸ்ஸாவ காணியில் இருந்து காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 19வது வாசகத்திற்கமைய நியதிச்சட்ட முறையான குறித்துரைத் தலுக்காக பரிமாற்றக் காணி வழங்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(ii) வழங்கப்பட்டிருப்பின் அது எவருக்கு என்பதையும்,

(iii) வழங்கப்பட்டுள்ள காணி அளவுகள் யாவையென்பதையும்,

(iv) அவ்வாறு வழங்கப்படக் காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) விசேட இலக்கம் மஹ 375 மற்றும் மஹ 307 இன் மீள்பெறுநரான அக்குரண, லுனுவில வீதி, இலக்கம் 37 ஐச் சேர்ந்த திரு. ஏ. என். ஏ. பாலிம் என்பவருக்கு உடைமையாக இருந்து காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சுவீகரிக்கப்பட்ட காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) அக் காணியைச் சுவீகரிக்கும் வேளையில் திரு. பாலிம் என்பவருக்கு சட்டபூர்வக் கடப்பாடு என்ற வகையில் 50 ஏக்கர்கள் வழங்கப்பட்டதா என்பதையும்,

(iii) வழங்கப்படவில்லையாயின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0386 / '09

6.

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வலபனே பிரதேச செயலகப் பிரிவில் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவுக்கு சொந்தமான காணிகளின் பரப்பளவு எத்தனை ஏக்கர்களென்பதையும்,

(ii) மேற்படி காணிகள் எந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு சொந்தமானவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) வலபனே புதிய நகரத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமாகவுள்ள காணிகளின் அளவு எவ்வளவென்பதையும் ,

(ii) புதிய நகர எல்லைக்குள் உள்ள மேற்படி காணிகளில் அத்துமீறி குடியேறியவர்கள் உள்ளார்களா என்பதையும்,

(iii) அவ்வாறு இருப்பின் ,அத்தகைய குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) மேற்படி அத்துமீறி குடியிருப்பவர்கள் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) வலபனே புதிய நகர எல்லைக்குள் அரசாங்க நிறுவனங்கள், மற்றும் அரசாங்க உத்தியோகபூர்வ விடுதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்,

(ii) மேற்படி காணிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட ஆணைக்குழு இற்றை வரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் எடுப்பதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0407 /'09

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெலிஅத்த – கெட்டமான்ன கிழக்கு, கொடகதுரஹேன முகவரியில் வசிக்கும் திரு.கே.லீலதுங்கவின் வீட்டுக்கு சட்டபூர்வமாக நீர் பெறப்படுகின்ற நீர்க்குழாயை எவரோ ஒருவர் சட்டவிரோதமாக உடைத்துள்ளாரென்பதையும்,

(ii) இது சம்பந்தமாக 2008/11/06, 2008/12/14 மற்றும் 2008/12/16 ஆகிய திகதிகளில் பெலிஅத்த பொலீசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தென்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பாக பெலிஅத்த பொலீசாரால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(ii) திரு. லீலதுங்கவின் வீட்டுக்கு மீண்டும் நீர் விநியோகத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்,

(iii) இச்சட்ட விரோத செயலைப் புரிந்தவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0119 / '09

8.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உள்நாட்டு பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக 2008 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின் மூலம் (NLDL) கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கடன் திட்டத்தின் கீழ் உற்பத்தியாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்களுக்கும் கடன் வழங்கும் நடவடிக்கை எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(ii) இக்கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவையென்பதையும்,

(iii) 2008 மற்றும் 2009 ஆகிய ஒவ்வொரு ஆண்டிலும் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வெவ்வேறாக எவ்வளவு கடன் தொகை வழங்கப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி கடன் திட்டத்தின் கீழ் எத்தனை பேருக்கு பணம் வழங்கப்பட்டதென்பதையும்,

(ii) மேற்படி கடனாளிகளின் பெயர், முகவரி மற்றும் கடன் தொகை ஆகிய விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0233 / ' 09

9.

கௌரவ பேமசிறி மானகே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிழக்கு மாகாண முதலமைச்சரைச் சந்திப்பதற்காக வெளிநாட்டு அரச பிரதிநிதிகள் வருகை தந்தனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி முதலமைச்சரை சந்திப்பதற்காக வருகை தந்த வெளிநாட்டு அரச பிரதிநிதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) மேற்படி முதலமைச்சரை சந்திப்பதற்காக வருகை தந்த வெளிநாட்டு அரச பிரதிநிதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) இவர்கள் எப்போது வருகை தந்தனர் என்பதையும்,

(iv) இந்த அரச பிரதிநிதிகள் மத்திய அரசாங்கத்தின் புரிந்துணர்வோடு முதவலமைச்சரை சந்திப்பதற்காக வருகை தந்தனரா என்பதையும்,

(v) இந்த அரச பிரதிநிதிகள் எப்பணிக்காக வருகை தந்தனர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0272 / '09

10.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பயிர்ச் செய்கைகளுக்கு பங்கமேற்படுத்தும் வெண்மூட்டைப்பூச்சி நோயினால் மரம், செடி கொடிகள் உள்ளிட்ட விவசாய உற்பத்திகள் அழிவுறும் நிலை ஏற்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின் இது தொடர்பாக மேற்படி அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டது எப்போது,

(ii) இது வரை எந்தளவுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது,

(iii) இது தொடர்பாக இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை,

(iv) நிலைமையைக் கட்டுப்படுத்தி பயிர்களைப் பாதுகாக்க முடியுமாக உள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0387 / '09

11.

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வலப்பனை பிரதேச செயலகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பணியாள் தொகுதி எவ்வளவென்பதையும்,

(ii) இப்பதவிகளை வகிப்போரின் பெயர்கள் மற்றும் உரிய கடமைப் பட்டியல்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் மற்றும் இவ்வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன என்பதையும்,

(ii) இப்பதவிகளுக்கான கடமைகள் எவ்வாறு பேணப்படுகின்றன என்பதையும்,

(iii) நிலவுகின்ற வெற்றிடங்கள் நிறப்பப்படும் கால எல்லை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0408 / '09

12.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் கஷ்டப் பிரதேச கொடுப்பனவைப் பெறும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அப்பாடசாலைகள் யாவை,

(iii) மேற்படி பாடசாலைகளுக்கு கஷ்டப் பிரதேச கொடுப்பனவு எந்த அளவீடுகளின்படி வழங்கப்படுகின்றன

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் மஹல கொட்டுவ, ஸ்ரீ சுமன மகாவித்தியாலயம் கஷ்டப் பிரதேச கொடுப்பனவு செலுத்தப்படாத பாடசாலை என்பதை அவர் அறிவாரா?

(இ) இப்பாடசாலைக்கும் கஷ்டப் பிரதேச கொடுப்பனவைச் செலுத்த அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0123 / '09

13.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நீதிமன்றத்தின் கட்டளைக்கேற்ப தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்ற வர்களையும் மற்றும் தண்டனை வழங்கப்பட்டுள்ளவர்களையும் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பு சிறைச்சாலைகள் திணைக்களத்தற்குரியதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடத்திலும் தப்பியோடுவதற்கு முயற்சி செய்தமையினால் அல்லது வேறு காரணங்கள் நிமித்தமாக தடுத்து வைக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் மரணமடைந்துள்ளார்கள் என்பதை தனித்தனியாகவும்,

(ii) தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தப்பியோடுவதை கட்டுபடுத்துவதற்கும் மரணமடைவதை தவிர்ப்பதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) இவ்வாறு மரணமடைந்தவர்களின் தங்கிவாழ்பவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0273 / '09

14.

கௌரவ லக்ஷ்மன் நிபுண ஆரச்சி,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கோட்டே, இலங்கை மின்சார கம்பனியினால், 97025820 ஆம் இலக்க மின்மானிக்காக 2009.05.05ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மின்சார கட்டணப் பட்டியலில் தாமதக் கட்டணமாக ரூபா. 843.50 பணம் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தாமதக் கட்டணமாக ரூபா.843.50 பணத்தைச் சேர்த்துக் கொள்வதற்குள்ள உரிமை யாது,

(ii) அப்பணம் கணக்கிடப்பட்ட முறை யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கும் அரசுக்கும் உரிய மாத்தளை மாவட்டத்தின் காணிகளில் மத்திய தர வகுப்பினருக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறு காணிகள் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்,

(iii) இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஏக்கர் அளவு பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் எவ்வளவு என்பதையும்,

(iv) அந்த காணிகள் வழங்கப்பட்ட அடிப்படை மற்றும் நிபந்தனைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மத்திய வகுப்பினருக்கு வழங்கப்பட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத, காடுகள் அடங்கிய காணிகளை அரசு பொறுப்பேற்று அவற்றை காணிகள் அற்றவர்களுக்கு வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 3 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 246, நிகழ்ச்சித்திட்டம் 1 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ரூபா நூற்று ஏழு கோடியே தொண்ணூற்றி இரண்டு இலட்சத்து எண்பதினாயிரம் (ரூபா 107,92,80,000,) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 246 | — | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | — | நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டம் | |
| | — | ஆக்கப்பொருட் செலவுகள் ரூ. | 107,92,80,000 |
| | | ரூ. | 107,92,80,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, யூலை மாதம் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 7 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 15,316,230,000.

*2.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 118, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ரூபா இருநூற்றி ஐம்பது கோடி (ரூபா 2,50,00,00,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 118 | — | கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | |
| கருத்திட்டம் : 03 | — | கமத்தொழில் அபிவிருத்தி மீண்டுவருஞ் செலவினம் ரூ. | 2,50,00,00,000 |
| | | ரூ. | **2,50,00,00,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, யூலை மாதம் 7 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 6 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 12,816,230,000.

*3.

விளையாட்டுத்துறை, பொதுப் பொழுதுபோக்கு அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 294, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ரூபா ஐம்பது மில்லியன் (50,000,000,) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | ரூபா |
|---|---|---|---|
| தலைப்பு: 294 | — | தேசிய விலங்கியல் காட்சிச்சாலைகள் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | |
| கருத்திட்டம் : 01 | — | விலங்கியல் காட்சிச் சாலைகள் அபிவிருத்தி | |
| | | ஆக்கப்பொருட் செலவு | 50,000,000 |
| | | | 50,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, யூலை மாதம் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 8 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 16,395,510,000

*4.

அம்புலுவாவ திசாநாயக முதியான்சேலாகே ஜயரத்ன மத நிலையம் மற்றும் உயிரியற் பன்வகைத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*9.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*10.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*14.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*27.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*28.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

29.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

32.

விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை.

33.

இலங்கை கடல்கடந்த முஸ்லிம் கல்விசார் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0096 / ' 09

1.

கௌரவ ஆர். பி. எ. ரணவீர பத்திரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அமைச்சர்களினதும் பணியாளர் குழுவினதும் பாவனைக்காக வாகனங்கள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வாகனங்கள் அவ்வாறு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறப்பட்டிருப்பின் 2008 ஆம் ஆண்டில் அமைச்சர்களின் பாவனைக்காக எத்தனை வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதையும்,

(ii) அமைச்சர்களின் பணியாளர் குழுவுக்காக எத்தனை வாகனங்கள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதையும்,

(iii) 2008 ஆம் ஆண்டில் அந்த வாகனங்களுக்காக செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iv) அமைச்சர்கள், மற்றும் பணியாளர் குழுவுக்காக 2008 ஆம் ஆண்டில் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது எ ன்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அதன்படி, இதற்காக வாடகையாக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0157 / '09

2.

கௌரவ விஜித ரணவீர,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1979 ஆம் ஆண்டின் 63ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1964 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உள்ளூராட்சி, வீடமைப்பு சட்டத்தின் கீழ் தென்மாகாணத்தில் அமைக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் எவ்வளவு ,

(ii) இவ்வுள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் செயற்படுத்தப்பட்ட வீடு / வீடமைப்புத் திட்டங்கள் வெவ்வேறாக எத்தனை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இருபது வருடங்களுக்கு மேலாக வாடகை அடிப்படையில் மேற்குறிப்பிட்ட வீடுகளில் குடியிருக்கும் பிரதான குடியிருப்பாளரின் பெயர், முகவரி மற்றும் மாதாந்த வீட்டு வாடகை ஆகியவை யாவை என அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) 2007.10.12 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மற்றும் மாகண சபைகள் தொடர்பான ஆலோசனைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் பிரகாரம், மாதாந்த வாடகை இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேலாக உள்ள இருபது வருடங்களுக்கு மேல் வாடகை அடிப்படையில் குடியிருந்தவர்களுக்கு இவ்வீடுகளின் உரிமையை கையளிப்பது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் எந்தக் காலகட்டத்தில் மேற்கொள்ளப்படும் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?